செ.வெ.எண்.270 நாள்.24.04.2018.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம் நொச்சிகுளத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், நொச்சிகுளத்தில் தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி, சிறப்பு கிராம சபை கூட்டம் கிராம மூத்த உறுப்பினர் திரு.கே.பண்டாரம் அவர்கள் தலைமையில் இன்று (24.04.2018) நடைபெற்றது. இந்த கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார். கிராம சபை கூட்டத்தில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் உரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அலுவலர்கள், பொதுமக்கள் கண்டு களித்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி இன்று நாடு முழுவதும் சிறப்பு கிராம சபை கூட்டம் இன்று நடத்தப்படுகிறது. தமிழக அரசு மக்கள் நலத்திட்டங்களை அதிக அளவில் செயல்படுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாச்சி இயக்கத்தின் கீழ் 29 கிராம ஊராட்சிகளில் மத்திய அரசின் 7 திட்டங்கள் 100 சதவீதம் முழுமையாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வங்கி கணக்கு துவக்குதல், வங்கிகள் மூலம் ரூ.12/–ல் விபத்து காப்பீட்டுத் திட்டம், ரூ.330/–ல் காப்பீட்டு திட்டத்தில் அனைவரையும் சேர்த்தல். இத்திட்டத்தால் விபத்து மற்றும் எவ்வித காரணத்தால் இறந்தாலும் வாரிசுதாரர்களுக்கு பணம் கிடைக்கும். மேலும், தனிநபர் இல்ல கழிப்பறை கட்டும் திட்டத்தில் இதுவரை கழிப்பிடம் கட்டாதவர்கள் உடனடியாக கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் கழிப்பறைகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் மானிய விலையில் ரூ.50/–ல் LED பல்பு வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மின்சாரச் செலவு மிச்சமாகும். மேலும், இலவச எரிவாய இணைப்பு இல்லாதவர்களுக்கு இணைப்பு வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இங்கு உங்களுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் பயனடையச் செய்ய வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாண சுந்தரம், முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திரநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாலசுப்பிரமணியன், திருமதி.ஆறுமுகக்கனி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.